## நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, செங்கல்பட்டு

## CC No.845/2022

அ.சா.– 1 திரு. மனோகரன் த/பெ. விக்டர்ராஜ் நாள்–07.10.2025

குறுக்கு விசாரணை–

எதிரி வனஜா என்பவர் கல்பாக்கம் அணு சக்தி துறையில் 37 ஆண்டுகளாக பணிபுரிந்து வருகிறார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. நான் பணி ஓய்வு பெறும் போது என்ன பணியிலிருந்தேன் என்று கேட்டால் அணு சக்தி துறையில் பொது பணி துறையில் இயக்குநராக இருந்து பணி ஓய்வு பெற்றேன். வனஜா எனக்கு கீழ் சுமார் 8 ஆண்டுகள் பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். 4 ஆண்டுகள் தான் நேரடியாக எனக்கு கீழ் பணிபுரிந்தார்மீதம் உள்ள 4 ஆண்டுகள் எங்களுக்கு இடையில் வேறு ஒரு அலுவலர் இருந்தார். எனக்கு கீழ் பணிபுரிந்த காலத்தில் வனஜா நான் கூறும் பணிகளை சரிவர செய்து வந்தாரென்றால் சரிதான். அவர் எனக்கு கீழ் பணிபுரிந்த போது என்னால் கொடுக்கப்படும் பணிகளை சரிவர செய்துவந்தார் என்று சொன்னால் சரிதான். நான் எனக்கு தேவையான அலுவலக வேலைகளை எதிரி வனஜாவிடம் முறையிட்டு செய்து பெற்று கொள்வேன் என்றால் சரிதான். எதிரி மகாராஷ்டிரா மாநிலத்தை சேர்ந்தவர் என்றால் சரியல்ல அவர் தமிழ்நாட்டை சேர்ந்தவர் ஆனால் மகாராஷ்டிராவில் செட்டில் ஆகியுள்ளார். வனஜா மகாராஷ்டிராவில் படிப்பை முடித்திருந்தார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அவரது பெற்றோர்கள் ஆர்மி என்பதால் பல்வேறு மாநிலங்களில் படித்திருக்கலாம்.

வனஜா ஒரு சமூக பணியாளர் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. வனஜா இண்டர்னல் கம்ப்ளைன்ட் கமிட்டியில் தலைவராக 10 ஆண்டுகளாக இருந்தார் என்று சொன்னால் நான் வந்ததிலிருந்து 8 ஆண்டுகாலம் வரை இருந்தார். அவர் தன்னிடம் மகளிர் பணியாளர்கள் மூலம் வரும் புகார்களை நேர்மையாக விசாரித்து அதற்குண்டான நியாயமான அறிக்கையை சமர்ப்பிப்பார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. அந்த நிறுவனத்தில் பணிபுரியும் பெண்களுக்கு நடக்கும் குடும்ப வன்முறைகளில் தலையிட்டு அவர்களுக்கு நல்ல முறையில் தீர்வு வழங்குவார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது. வனஜாவின் கணவர் கல்பாக்கம் யூனிட்டில் பணிபுரிந்து கொண்டிருந்த போது அவர் வேறு மாநிலத்திற்கு மாற்றம் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வனஜாவிற்கு இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். அவரது மூத்த மகள் திருமணம்

ஆகி பெங்களூரில் வசித்து வருகிறார் என்றால் நான் பணி ஓய்வு பெறும் வரை அங்கு தான் இருந்தார். மற்றொரு பெண் தனது மேல்படிப்பிற்காக வேலூரில் வசித்து வந்தார் என்று சொன்னால் அதைபற்றி எனக்கு தெரியாது.

வனஜா கல்பாக்கத்தில் உள்ள குவாட்டர்சில் தனியாக வசித்து வந்தார் என்று சொன்னால் இல்லை 2 வது மகள் அங்கிருந்து தான் படித்து வந்தார். வனஜா எனக்கு குடும்ப நண்பர் என்று சொன்னால் அவர் எனது அலுவலகத்தில் பணிபுரியும் சீனியர் கொலிக் என்பதால் எனக்கு குடும்ப நண்பர். எனது மனைவி மற்றும் எனது தாயார் வனஜா வீட்டிற்கு சென்று வந்துள்ளனர் என்று சொன்னால் சரிதான். எனது வீடும், வனஜா வீடும் பின்பக்கத்தில் ஒன்றாக இருக்கும் என்றால் பகுதியாக ஒன்றாக இருக்கும். எனது பக்கத்து வீட்டில் வசிப்பவர் எனது டைரக்டர் என்று சொன்னால் சரிதான். எங்கள் டைரக்டர் வீட்டிற்கும், எனது வீட்டிற்கும் இடையே ஒரு சிறிய தடுப்பு சுவர் மட்டும் தான் உள்ளது என்றாலும் அவர்கள் வீட்டில் என்ன நடக்கிறகு என்று எனது வீட்டிலிருந்து பார்க்க முடியும் என்று சொன்னால் சரிதான். வனஜா குடியிருக்கும் வீடு பெரிய பங்களா அதை சுற்றி தோட்டம் உண்டு என்று சொன்னால் சரிதான். நாங்கள் எங்கள் வீட்டில் ஒரு செல்ல நாய் வளர்த்து வந்தோம் என்று சொன்னால் சரிதான். அந்த நாயை வாக்கிங் அழைத்து செல்வதற்கு வனஜா வீட்டின் காம்பவுண்டை பயன்படுத்துவோம் என்று சொன்னால் சரியல்ல.

நான் தமிழ்நாட்டை சேர்ந்தவர் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் உறவுக்காரர்கள் வருவார்கள் என்றால் சரிதான். வனஜா தனியாக இருப்பதால் அவரது வீட்டின் சாவியை அந்த வீட்டினை பயன்படுத்துவதற்காக பலமுறை நான் அவரிடம் கேட்டு பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வனஜா வீட்டிற்கு சென்று வரும் பழக்கம் உள்ளது என்று சொன்னால் மாலை நேரம் வாக்கிங் செல்லும் போது சென்று வருவது உண்டு. நான் தனியாக வனஜா வீட்டிற்கு சென்றுள்ளேன் என்று சொன்னால் ரோாக வாக்கிங் செல்லும் போது செல்வேன். கோவிட் காலத்தில் நான் வனஜா வீட்டிலிருந்து தான் பணிபுரிந்தேன் அவரது கணினியை நான் பயன்படுத்தி வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 18.04.2022 முதல் நான் பணி ஓய்வு பெறும் வரை அதாவது 30.04.2022 வரை வனஜாவின் வீட்டு சாவியினை நான் தான் வைத்திருந்தேன் என்று சொன்னால் பொய் சரியல்ல.

18.04.2022 முதல் 02.05.2022 வரை வனஜா விடுப்பு கடிதம் கொடுத்து அதை நான் ஏற்று கொண்டேன் என்று சொன்னால் இல்லை சாட்சி பின்னிட்டு எனக்கு

ஞாபகமில்லை என்று கூறுகிறார். விடுப்பு கொடுத்த காலத்தில் 10 நாட்களுக்கு முன்பே அவர் பணியில் சேர்ந்துவிட்டார். நான் விடுப்பை மறுத்து நிராகரித்து வனஜாவை பணியில் சேருமாறு கேட்டு கொண்டதால் தான் அவர் பணியில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. 11.04.2022 முதல் 17.04.2022 ஆகிய தேதிகளில் நான் விடுப்பு பெற்றிருந்தேன் என்று சொன்னால் ஞாபகமில்லை. ஆனால் நான் விடுப்பை கேன்சல் செய்துவிட்டு 3 நாட்களில் பணியில் சேர்ந்துவிட்டேன் என்று சொன்னால் இல்லை. வனஜாவிடம் என்னுடைய Achievement present செய்தவற்காக தயார் செய்யுமாறு கேட்டு கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. நானே எனது Achievement டை Retirement present செய்ய முடியாது. 30.04.2022 அன்று என்னுடைய குடும்ப விழாவில் வனஜா பேசினார் என்றாலும், அது நன்றாக இருந்தது என்று எனது குடும்ப நண்பர்கள் வாழ்த்து தெரிவித்தார்கள் என்றாலும் சரிதான் பிரேயர் மீட்டிங்கில் பேசினார்.

27.05.2022 அன்று வனஜாவை சந்தித்து என் மீதுள்ள ஒரு புகார் சம்மந்தமாக பதில் அளிக்கவேண்டுமென்று அந்த பதிலினை தயார் செய்யுமாறு கேட்டு கொண்டேன் என்று சொன்னால் இல்லை. அவ்வாறு நான் கேட்டு கொண்டதன் பேரில் வனஜா அதனை தயார் செய்து கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. வனஜா பெண்களிடம் தவறாக நடந்து கொண்ட அதிகாரிகள் மீது நேர்மையான முறையில் நடவடிக்கை எடுப்பதால் பல அதிகாரிகள் அவருக்கு எதிரிகளாக இருந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.xxx V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.